செ. கு. எண்:89

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 6.4.2013

கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. J.பீட்டர் அவர்கள் 27.3.2013 அன்று பிலாவிளை அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.3.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

தஞ்சாவூர் மாவட்ட தனிப் பிரிவில் (Special Branch) உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சாமிநாதன் அவர்கள் 30.3.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் தஞ்சாவூர் - புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திண்டுக்கல் மாவட்டம், பழனி, தமிழ்நாடு சிறப்பு காவல் படை 14-ம் அணியில் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி தீபா அவர்கள் 31.3.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி தாலுகா காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.சுப்பிரமணியன் அவர்கள் 29.3.2013 அன்று பாளையங்கோட்டை – சீவலபேரி சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.4.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலை கிராமிய காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திருமதி கலைச்செல்வி அவர்கள் 2.4.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், நவீன காவல் கட்டுப்பாட்டறையில் ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. R.ரவிகுமார் அவர்கள் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.4.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. A.சுந்தரபாண்டியன் அவர்கள் 29.3.2013 அன்று மீன்சுருட்டி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.4.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை ஆய்வாளர் ரவிகுமார்; உதவி ஆய்வாளர் சாமிநாதன்; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுப்பிரமணியன், சுந்தரபாண்டியன்; தலைமைக் காவலர்கள் பீட்டர், கலைச்செல்வி மற்றும் காவலர் தீபா ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் - புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் 30.3.3013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் தஞ்சாவூர் மாவட்ட தனிப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. பொற்செழியன் காயமடைந்துள்ளார் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான ஆய்வாளர் ரவிகுமார்; தலைமைக் காவலர் கலைச்செல்வி, காவலர் தீபா; சாலை விபத்துகளில் உயிரிழந்த உதவி ஆய்வாளர் சாமிநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் சுப்பிரமணியன், சுந்தரபாண்டியன்; தலைமைக் காவலர் பீட்டர் ஆகியோரின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், தஞ்சாவூர் - புதுக்கோட்டை நெடுஞ்சாலையில் 30.3.3013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் காயமடைந்த திரு. பொற்செழியனுக்கு 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**